குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.1392/2022**

வழக்கு சாட்சி ம.சா.2

2026ம் ஜுன் மாதம் 2 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர்என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதிவாணன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 02.06.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு மெர்கண்டெல் வங்கி, வெப்படை கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி பரணிராஜ் வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். **கணக்கு எண். 264100050302100. 01.07.2022 முதல் 30.07.2022 வங்கி பரிவர்த்தனை கணக்கு மா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார்தாரர் பரணிராஜ் என்பவர் 16.07.2022 ம் தேதி சங்ககிரி HDFC வங்கியின் காசோலையான 000023 என்ற காசோலையை தங்களது வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்கிறேன். 16.07.2022 ம் தேதி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது அதனுடைய counter file ஐ உள்ள முத்திரை எங்களுடைய வங்கியினுடையது தான். 18.07.2022 ம் தேதி HDFC வங்கியில் சங்ககிரி கிளையில் வசூலுக்காக அனுப்பினோம். ரிட்டன் மெமோ என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் other reasons என்று காரணம் காட்டி திருப்பப்பட்டது. HDFC வங்கி சங்ககிரி கிளையில் இருந்து தான் இந்த காசோலை திருப்பப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் மா.சா.ஆ.3 ஆவணம் அதற்கான திருப்புதல் மெமோ என்றால் சரிதான்.

**வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**